IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# எழுத்து எனப்படுவ அகர முதல் னகர இறுவாய் முப்பஃது என்ப

**Eḻuttu eṉappaṭuva akaramutal ṉakara iṟuvāy muppahtu eṉpa**

**Dr.A. Natarajan**,
Assistant Professor, Department of Tamil,
Dhanalakshmi Srinivasan University, Samayapuram Thiruchirapalli

**Abstract**

Numerous studies on the Tholkappiyam have been published over time in various fields of research. Scholars have established through their investigations that the grammatical concepts embodied in the twenty-seven sections distributed across its three divisions possess diverse research dimensions. Studies have also been undertaken, and continue to be undertaken, comparing the Tholkappiyam with other grammatical works in terms of structure, analysis, and embedded meaning, as well as from theoretical perspectives. In this context, the present study is based on the hypothesis that the nine sections of the Ezhuthathikaram, ranging from Noonmarapu to kutriyalukara punariyal**,** constitute an expansion and development of the very first sūtra of the Tholkappiyam, namely "Ezhuthenap paduva" ("That which is called a letter"). This opening noorpa not only identifies the fundamental letters of the Tamil language but also provides the basis for understanding the origin of letters, their occurrence and function in language, their transformations, assimilations, and processes of stabilization. The subsequent noorpa in the later sections elaborate and explain these foundational concepts in greater detail. Accordingly, this study proceeds on the premise that the first noorpa of the Noonmarapu serves as the source and conceptual foundation of the entire Ezhuthathikaram**.**

## முன்னுரை

தொல்காப்பியம் பற்றி ஆய்வுகள் காலந்தோறும் பல களங்களில் வெளிவந்துள்ளன. மூன்று அதிகாரங்களின் இருபத்தேழு இயல்களிலும் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்கணக் கருத்துக்கள் யாவும் பல ஆய்வுக் களங்களைக் கொண்டவை என்பதை ஆய்வாளர்கள் பலர் தங்கள் ஆய்வின்வழி நிறுவியுள்ளனர். கட்டமைப்பிலும், பகுப்பிலும் உட்பொதிந்த பொருளிலும் தொல்காப்பியம் பிற இலக்கண நூல்களோடு ஒப்பிட்டும் கோட்பாட்டு அடிப்படையிலான ஆய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. நிகழ்த்தப்பட்டும்

வருகின்றன. அவ்வகையில் எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன்மரபு முதல் குற்றியலுகரப் புணரியல் வரையிலான ஒன்பது இயல்களும் தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரத்திற்கும் முதல் நூற்பாவான "எழுத்தெனப் படுவ" என்ற நூற்பாவின் விரிவாக்கமும் அதன் வளர்ச்சியுமே என்ற நிலையில் அடக்கி, அதனையே கருதுகோளாகவும்கொண்டு இவ்வாய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளன. முதல் நூற்பா தமிழ் எழுத்துக்களின் முதன்மை எழுத்துக்களாக அடையாளப்படுத்துவதோடு, எழுத்துக்களின் பிறப்பு முதல் மொழியில் இடம்பெறும் விதம், மாற்றம், மயக்கம், நிலைபேறாக்க விளக்கம் தருகிறது என்பதை விளக்குவதாகப் பின் இயல்களில் வரும் நூற்பாக்கள் விளக்குகின்றன. இதன் அடிப்படையில் நூன்மரபின் முதல் நூற்பாவேவை எழுத்து அதிகாரத்தின் மூலம் என்ற கருதுகளோடு இவ்வாய்வு அமைகிறது.

**தொல்காப்பிய இயல் அமைப்பு**

இலக்கண நூல்கள் தொல்காப்பியத்திற்குப் பிறகு பல தோன்றியுள்ளன. அந்நூல்கள் யாவும் தொல்காப்பியத்தின் கருதுகோளை அடியொற்றியே அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. கருத்துக்கள் மட்டுமின்றி இயல்களும் அவற்றோடு ஒரீர் இயல்கள் குறைந்தோ அல்லது அதனைப் போன்று அமைந்துள்ளதைப் பிற இலக்கண நூல்களோடு ஒப்பிடும்போது அறியமுடிகிறது. இதன்வழி தொல்காப்பிய இயல் அமைப்புக்களின் செறிவைக் காணலாம். தமிழில் கிடைத்த முதல் நூலே, இலக்கண நூலான தொல்காப்பியம் ஆதலால் தொல்காப்பிய இலக்கணத்திற்கு முன் தெளிவான இலக்கண இலக்கியங்கள் இருந்திருக்கக்கூடும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. "தொல்காப்பிய இலக்கணம் படைப்பதற்கு முன்னால் தமிழில் இலக்கியங்களும், இலக்கணங்களும் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் சிறந்த நிலையில் இருந்திருக்க வேண்டும்" (மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, 2016)

**இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே**
**எள்ளினின்றே எடுக்கப்படும் எண்ணெய் போல்**
**இலக்கியத்தினின்றே எடுபடும் இலக்கணம்**

என்ற பழமொழி சிறந்த இலக்கணம் உருவாவதற்கு இலக்கியங்கள் சிறந்து இருக்க வேண்டும் என்பது இந்நூற்பாவின்வழித் தெளிவாகிறது. மூன்று அதிகாரங்களின் ஒவ்வோர் இயலும் அதற்கென்று வரையறுக்கப்பட்ட

கருத்துக்களோடுக் கட்டமைக்கப்பட்டுள்ளன. எழுத்ததிகாரத்தின் இயல்கள் எழுத்துக்களின் வடிவம் முதல் அவை சொற்களில் வந்து நிற்கும்போது பெறுகின்ற மாற்றம் வரை விளக்கிச் செல்கிறது. சொல்லதிகாரத்தில் சொற்களின் வகைப்பாடு, பெயர்களின் புடைப்பெயர்சிக்கு அடிக்கோளிடும் வேற்றுமைகளின் பெயர்கள், அவற்றின் பொருள் பாகுபாடு, வேற்றுமைகளின் மயக்கம் ஆகியவற்றை விளக்கியதுடன் வாக்கியங்களில் அடிப்படையாக இடம்பெறும் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், இடைச்சொற்கள், உரிச்சொற்களின் தன்மை மற்றும் அவற்றைக் காணும் முறைமையோடு சொற்களின் பண்புகளில் இடம்பெறும். மேலும் எடுத்துரைக்க வேண்டிய கருத்துக்களை எச்சவியலில் கூறி நிறைவு செய்துள்ளார் தொல்காப்பியர்.

## எழுத்ததிகாரத்தின் இயல் அமைப்பு

தொல்காப்பியம் பிற்கால இலக்கண நூல்களோடு ஒப்பிடும்போது இயல் வைப்பு முறையின் அடிப்படையில் தனித்துவம் பெறுகிறது. ஓர் அதிகாரத்திற்கு ஒன்பது இயல்கள் என்ற முறையில் மூன்று அதிகாரங்களிலும் மொத்தமாக 27 இயல்களை அமைத்து இலக்கணம் வகுத்துள்ளார் தொல்காப்பியர். "தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தை 9 இயல்களாக விரிப்பதன் மூலம் ஏனைய இலக்கணங்களிலிருந்து தனித்து நிற்கிறது" (எழுத்திலக்கணக் கோட்பாடு செ. வை. சண்முகம், ப.29) எழுத்ததிகார நூன்மரபு, மொழிமரபு, பிறப்பியல் ஆகிய முதல் மூன்று இயல்கள் முறையே தமிழில் வழங்கப்படும் எழுத்துக்களின் பெயர்கள், அவ்வெழுத்துக்களுக்கான காலஅளவு, வகைப்பாடு, எழுத்துக்கள் பிறக்கும் முறைகளை விளக்குகின்றன. பின்வரும் ஆறு இயல்கள் ஓரெழுத்து மற்ற எழுத்துக்களுடன் சேர்ந்து நிற்கும்போது ஏற்படக்கூடிய எழுத்துக்களின் புணர்ச்சியை விளக்குகின்றன. குறிப்பாகத் தொகை மரபிற்குப்பின் உள்ள இயல்களான உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுக்கரப்புணரியல் ஆகிய நான்கு இயல்களும் நிலைமொழி ஈற்றிலுள்ள எழுத்து, வருமொழி முதலிலுள்ள எழுத்து, ஆகியவற்றை அளவுகோலாகக் கொண்டே அமைந்துள்ளனவாயினும் அவ்வியல்களும் புணரியலின் விரிவாக்கம் எனக் கொள்ளலாம். "தொல்காப்பிய எழுத்ததிகாரக் கடைசி ஆறு இயல்களையும் (புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர்மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல்) புணரியல் என்று பொதுமைப்படுத்தலாம். (எழுத்திலக்கணக் கோட்பாடு செ. வை. சண்முகம், ப.29) தொல்காப்பிய மூன்று அதிகாரத்தில் உள்ள இயல்களின் அமைப்பை உற்று

நோக்குங்கால் முதல் நான்கு இயல்கள் கருவி இயல்களாவும், பின் அமைந்த இயல்கள் செயல்படுத்தப்படும் இயல்களாகவும் அமைக்கப்பட்டுள்ளதைக் காணலாம். கருவிகொண்டு செய்தல் என்பதன் பொருள் விளக்கமாக இயல் அமைப்பு அமைந்திருப்பதைக் காணலாம்.

**எழுத்து எனப்படுவ**

தமிழ் மொழியில் உள்ள எழுத்து வகைகள் மூன்று. அவை: உயிர், மெய், சார்பெழுத்துக்கள். இவற்றில் முதன்மையானது உயிரும், மெய்யும் எனவேதான் "எழுத்தெனப்படுவ அகரமுதல் னகர இருவாய்" என வரையறுக்கிறார் தொல்காப்பியர். "தமிழில் வழங்கப்படும் சொல்லாக்கத்திற்குப் பயன்படும் ஒலி வடிவங்கள் முப்பது என்று கண்டு அவற்றை எழுதுவதற்குத் தனித்தனி வடிவங்கள் அமைத்தனர். தமிழில் எழுத்து என்னும் சொல் ஒலி வடிவத்தையும் குறிக்கும், வரி வடிவத்தையும் குறிக்கும்" (தொல்காப்பிய ஆராய்ச்சி, டாக்டர் சி. இலக்குவனார், ப.28) தமிழின் முதன்மை எழுத்துக்கள் என விளக்கியுள்ளார் இலக்குவனார். தொல்காப்பியர் தொல்காப்பியம் படைக்கும் முன்னதாகவே தமிழ்மொழி நிறைவான எழுத்து அமைப்பைப் பெற்றுவிட்டது என்பதை

**"எழுத்து எனப்படுவ**
**அகர முதல்**
**னகர இறுவாய் முப்பஃது என்ப**
**சார்ந்துவரல் மரபின் மூன்று அலங்கடையே"** (தொல்.எழுத்து.1)

எழுத்ததிகாரத்தின் முதல் நூர்பாவான இந்நூற்பா எடுத்துரைக்கும். முப்பது என்ற கூற்றின்படி நோக்கும்போது முன்பு உள்ளோர் கூறுவர் என்பது புலப்படும். சார்பு எழுத்துக்கள் குற்றியலுகரம், குற்றியலிகரம் தனித்த உருவம் மற்றும் மெய்யெழுத்தைச் சார்ந்து இயக்கம் பெறுவதாலும் ஆய்தம் உருவம் பெற்று உயிர் அல்லது வல்லின மெய் இடையே மட்டும் இயங்குவதாலும் முதன்மை எழுத்து முப்பது எழுத்துக்களிலிருந்து விலக்கி சார்ந்து வந்து இயங்குவன என்பதையும் முதல் நூற்பாவே எடுத்துக்காட்டுகிறது.

**'எழுத்து எனப்படுவ' உரையாசிரியர்கள் விளக்கம்**

"தமிழில் ஒலிவடிவ எழுத்துக்கள் முப்பத்து மூன்றும் வரிவடிவ எழுத்துக்கள் முப்பத்தொன்றுமே யாம். (குற்றியலுகரம், குற்றியலிகரம்) என இரண்டிற்கும் தனி வடிவங்கள் இல்லை. (தொல்காப்பிய ஆராய்ச்சி, டாக்டர் சி. இலக்குவனார்,

ப.30) இங்கு இலக்குவனார் கூற்றின்படி ஆய்தம் உருவம் பெற்ற வடிவம் எனவே அது வரிவடிவம் பெறும் தன்மை உடையது என நிறுவுகிறார்.

"எழுத்தென்று சிறப்பித்துச் சொல்லப்படுவன அகரமுதல் னகரம் ஈராகக்கிடந்த முப்பது என்று சொல்லுவர் சார்ந்து வருதலைத் தமக்கு இலக்கணமாக உடைய மூன்றும் அல்லாத இடத்தில் என்றவாறு, எனவே அம்மூன்றும் கூடிய வழி முப்பத்து மூன்று என்ப" (நச்சினார்க்கினியர் உரை) எனத் தொல்காப்பிய நூற்பாவிற்கு நச்சினார்க்கினியர் விளக்கம் கூறும்போது எழுத்து என்று சிறப்புப் பெறுவன அகரமுதல் னகரம் இறுதியாக உடைய முப்பது, சார்ந்து வரும் ஒன்றும் சார்ந்து வருவதின் அடிப்படையில் முப்பத்து மூன்று என்பர் என்கிறார்.

"தனித்துவரல் மரபினுடைய எழுத்து எனச் சிறப்பித்துச் சொல்லப்பெறுவன சார்ந்துவரல் மரபினுடைய மூன்றுமல்லாமல் அகரமாகிய எழுத்து முதலாக னகரமாகிய எழுத்து ஈராக உள்ள முப்பது என்று கூறுவர் ஆசிரியர்" என்று தமிழ் எழுத்துக்கள் **33** என்னும் தொகைதாம் தனித்து வரும் மரபு உடையன, சார்ந்து வரும் மரபினையுடையன என்பதோடு முதல் இறுதி என்ற முறையும் தமிழ் எழுத்துக்களில் தொகுதிப் பெயரும் அமையப் பெற்றுள்ளன" என்பது பாவலரேறு ச.பாலசுந்தரம் கூறும் உரைவிளக்கம்.

"எழுத்தென்று சொல்லப்படுவன அகரமாகிய முதலையுடையனவும், னகரமாகிய இறுவாயினை யுடையனயுமாகிய முப்பதென்று சொல்லுப. சார்ந்து வருதலாகிய இலக்கணத்தினையுடைய மூன்றும் அல்லாவிடத்தும், மூன்றும் ஆனவிடத்து முப்பத்து மூன்று சொல்லுவ என்றவாறு" (இளம்பூரணர் உரை) எனச் சார்பெழுத்துக்கள் இல்லாதவிடத்தில் தமிழ் எழுத்துக்கள் முப்பது மட்டும் என்பதும், சார்பெழுத்துக்கள் வரும் இடங்களை சேர்த்தால் முப்பத்து மூன்று என்பதும் இளம்பூரணர் விளக்கமாக அமைந்துள்ளது. மேற்காணும் மூன்று உரையாசிரியர்களின் கூற்றுக்களின்படி முதல், சார்பு இரண்டையும் சேர்த்துத் தமிழ் எழுத்துக்கள் முப்பத்து மூன்று என்பது உறுதியாகிறது.

**நூன்மரபு - அமைப்பும் பெயர்க்காரணமும்**

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் இயலான நூன்மரபு தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையில் அமையப்பெற்றுள்ளது என வரையறுக்கலாம். உயிர், மெய், சார்பெழுத்துக்களாக முப்பத்து மூன்று எழுத்துக்களை உடையதுபோல நூன்மரபின் நூற்பாக்களின் எண்ணிக்கையும்

முப்பத்து மூன்றாக அமைக்கப்பட்டுள்ளது. நூல்+ மரபு என்ற சொற்களின் நிலைமொழி ஈரான 'ல்' மெய் எழுத்து 'ன்' ஆகத் திரிதல் விதிப்படி 'ன்' எனத் திரிந்து நூன்மரபு என்றாகியுள்ளது. இவற்றில் நூல் என்பது எழுத்தையும் மரபு என்பது தமிழர் வரலாற்றில் தமிழ் எழுத்துக்களின் மரபையும் குறிப்பதாக நூன்மரபு என்ற சொல் தொல்காப்பியரால் வரையறுத்து வைக்கப்பட்டுள்ளமை புலனாகிறது.

"நூன்மரபு என்ற சொற்றொடரில் நூல் என்பது எழுத்தைக் குறிக்கிறது. மரபு எழுத்தின் வரலாற்றைப் பற்றி சொல்கிறது. நூன்மரபு எழுத்தின் வரலாற்றையும் அதன் இலக்கணத்தையும் பற்றிச் பேசுகிறது. 'நூல்' என்ற சொல்லுக்கு 'எழுத்து' என்று எப்படிப் பொருள் கூற முடியும்? (தொல்காப்பியம் எழுத்து, சொல் படலம், இராமலிங்கர் பணி மன்றம், டாக்டர் நா.மகாலிங்கம்) கேள்வி எழலாம்." நூல், பஞ்சு திரண்டு உருவாகிறது. அதுபோலவே பேச்சு ஒலி திரண்டு எழுத்து உருவாகிறது. இவ்வாறு ஒரு பொருளின் பெயர், இன்னொரு பொருளுக்கும் பெயராகி வருவ அதற்கு ஆகுபெயர் என்று இலக்கணம் சொல்கிறது. (தொல்காப்பியம் எழுத்து சொல் படலம்) வரையறுக்கப்பட்ட முப்பத்து மூன்று எழுத்துக்களின் பெயர்கள் அவற்றின் ஒலிப்புமுறையான மாத்திரை அளவு, உயிர், மெய், சார்பெழுத்துக்களின் எண்ணிக்கை உயிரில் குறில், நெடில் அகரம் முதல் னகர இறுவாய் என வரையறுக்கிறார் தொல்காப்பியர்.மெய்யெழுதுக்களின் வகைப்பாட்டில் வல், மெல், இடை என்ற வகைப்பாடு மெய்யில் ஒன்றுகூடி நிற்கும் முறைகளின் வகைப்பாடு என வரிசையாக எடுத்துக் கூறப்பட்டுள்ளதுடன், இயலின் இறுதியாகச் சுட்டெழுத்துக்கள் பற்றிய குறிப்புடன் நூன்மரபு நிறைவு செய்யப்பட்டுள்ளது.

**நூன்மரபு முதல் நூற்பா எழுத்ததிகாரத்தை எடுத்துச் செல்லும் முறை**

தமிழ் எழுத்துக்கள் யாவை? அவற்றின் உருவங்கள் யாவை? என்பனவற்றோடு, எழுத்துக்களின் பிறப்புமுறை, அதனோடு மொழியில் சொல்லாக்கம் பெறும்போது ஓர் எழுத்துடன் மற்றோர் எழுத்து கூடி நின்று சொல்லாதல் என்பவற்றையெல்லாம் எடுத்துரைப்பதே எழுத்ததிகாரத்தின் தலையாய பணியாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ள எழுத்ததிகாரத்தில் முதல் நூற்பா அதிகாரத்தின் ஒட்டுமொத்தக் கட்டமைப்பின் முழு விளக்கமாக அமைய வேண்டும் என்ற மனத்தின்மையோடு

**"எழுத்து எனப்படுவ**

**அகர முதல்**

**னகர இறுவாய் முப்பஃது என்ப**

**சார்ந்துவரல் மரபின் மூன்று அலங்கடையே"** (தொல்.எழுத்து.1)

என்ற இந்நூற்பாவை அமைத்துள்ளார் என்ற கருதுகோள் நமக்கு எழும். இக்கருதுகோளைக் கொண்டு எழுத்ததிகாரத்தில் இடம்பெறும் இயல்களின் தலைப்பையும் அவ்வியல்களில் உள்ளடக்கங்களான கருத்துக்களையும் அணுகும்போது இக்கருதுகோள் உறுதியானது என்பதும் தெளிவாகும். தமிழில் உள்ள மொத்த எழுத்துக்கள் முப்பத்து மூன்று. எழுத்துக்கள் மொழியில் எவ்வாறு இயக்கம் பெறுகின்றன என்பதை நூன்மரபின் இரண்டாவது நூற்பா முதல் குற்றியலுகரப் புணரியலின் கடைசி நூற்பா வரை கூறிச் செல்வார் தொல்காப்பியர்.

முதல் நூற்பா வரையறுத்துள்ள எழுத்துக்களின் உருவம் அவற்றின் உச்சரிப்பு, அளவு ஆகியவற்றை நூன்மரபு விளக்குகிறது. 33 எழுத்துக்களில் மொழி முதலில் வரக்கூடியன மொழி இறுதியில் வரக்கூடியன என்ற விளக்கத்தினை மொழி மரபு விளக்குகிறது. மொழி மனிதனால் பயன்படுத்தப்படுவது என்பதால் நம் மொழியின் ஆணிவேரான எழுத்துக்கள் மனித உடலில் இருந்து எவ்வாறு பிறக்கின்றன என்பதைப் பிறப்பியல் சுட்டிக்காட்டுகிறது. மொழியில் எழுத்து தொடக்கம் என்றால் அடுத்த நிலை மற்றோர் எழுத்துடன் இணைந்து சொல்லாக்கம் பெற்றுப் பொருள் உணர்த்தும் நிலைக்குச் செல்வதேயாகும். அந்நிலையில் ஓர் எழுத்து பிற எழுத்துக்களுடன் சேரும்பொழுது அவ்விடத்தின் உருவத்தில் ஏற்படும் மாற்றங்களின் பொதுவான விடையங்களின் விளக்கமாக அமைக்கப்பட்டுள்ள இயல்கள் புணரியலும், தொகைமரபும் ஆகும். தமிழில் உள்ள எழுத்துக்கள் உயிர், மெய் வகைப்பாடு முதன்மையானவை என்பதால் சொல்லாக்கத்தின்போது நிலைமொழி வருமொழி என்ற பாகுபாட்டின்படி உயிர்+உயிர் ஒன்று சேர்த்தல் உயிர்மயங்கியலிலும், மெய்+மெய் ஒன்று சேர்தல் புள்ளி மயங்கியலிலும் கூறப்பட்டுள்ளன. சொற்கள் பொருள் உணர்த்தும்போது முதன்மை இடம் பெறுவது வேற்றுமைகள் அவ்வேற்றுமை உருபுகள் மொழியீற்று எழுத்துக்களுடன் சேரும்பொழுது வேற்றுமை உருபுகள் பெறும் மாற்றம் அவற்றுடன் சாரியை உடனாகி மாற்றங்களை எழுத்தியல் விதிப்படி விளக்கும் இயலாக உருபியல் அமைந்துள்ளது. முதல் எழுத்துக்களின் இலக்கணம் உருபியலுடன் நிறைவு பெற்றதுடன், தொடர்ச்சியாகச் சார்பெழுத்துக்களின்

இலக்கண விளக்கத் தொடக்கமாகக் குற்றியலுகரப் புணரியல், அமைக்கப்பட்டுள்ளது. சார்பு எழுத்துக்கள் மூன்று எனும் ஆயுதம் மொழி முதலில் வருதல் இல்லை. மேலும் தமிழ் மொழிப் பயன்பாட்டில் ஒலிக் குறிப்பில் ஆய்தம் இடம்பெறுவதால் முதன்மை பெறவில்லை என்பதும், அவ்வெழுத்துப்போன்றே குற்றியலிகரப் பயன்பாடும் மிகச் சொற்பமே என்பதாலும் ஈற்று இயலுக்குக் குற்றியலுகரப் புணரியல் எனப் பெயர் கொடுத்துள்ளமை புலனாகும்.

**முடிவுரை**

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் இயல் மற்றும் இயல்களின் உள்ளடக்கங்கள் யாவும் முதல் நூற்பாவினை அடியொற்றியே அமைந்துள்ளன என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகிறது. எவ்வளவு பெரிய செயல்களைச் செய்வதற்கும் தொடக்கம் மிக முக்கியம் என்பதை உணர்ந்த தொல்காப்பியர் ஒட்டுமொத்தத் தமிழ் மொழியின் இலக்கண விளக்கத்திற்கான தொடக்கமாக அமைத்த, அதிகாரத்தின் முதல் இயல் நூன்மரபேயாம். அவ்வியலின் தொடக்கம் 'எழுத்தெனப்படுவ' நூற்பவாகும். அந்நூற்பாவின் முழு விரிவாக்கமாக அமைக்கப்பட்டுள்ளது எழுத்ததிகாரம். எந்த ஒரு மொழியின் தொடக்கமும் ஒலி என்ற எழுத்தில் இருந்து தான் தொடங்குகின்றது. அவ்வகையில் நூன்மரபு தமிழ் மொழியின் எழுத்துக்களை அடையாளப்படுத்தி அவற்றின் உருவம், உச்சரிப்பு, அளவு, அவற்றின் புணர்ச்சி போன்ற எல்லாவற்றையும் எடுத்துரைக்கும் அதிகாரமாக எழுத்ததிகாரம் அமைவதற்கு நூன்மரபின் முதல் நூற்பாவே ஆணிவேர்.

**துணை நின்ற நூல்கள்**


**1.** அண்ணாமலை பல்கலைக்கழகம்கோ, (பதிப்பாளர்). (1979) தொல்காப்பியம் எழுத்ததிகாரம் : இளம்பூரணர் உரை விளக்கவுரையுடன், அண்ணாமலை நகர், சிதம்பரம்.

2. இலக்குவனார், சி. (1961) தொல்க்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம், புதுகோட்டை.

3. கோவிந்தசாமி பிள்ளை, இராம.(ப. ஆ). (1993) தொல்க்காப்பியம் எழுத்ததிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்,

4. சண்முகம், செ. வை. (2001) பேராசிரியர், எழுத்திலக்கணக் கோட்பாடு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 004.

4. மருதநாயகம், ப பேராசிரியர், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், எழிலினி பதிப்பகம், சென்னை.

4. மகாலிங்கம், நா டாக்டர். (1994) தொல்காப்பியம் எழுத்து, சொல் படலம், இராமலிங்கர் மன்றம், சென்னை.

5. வரதராசனார், மு. (2016) தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதமி பதிப்பகம், புதுதில்லி.